தலைமைச் செயலகம்,
சென்னை –9.

**கடித (நிலை) எண் 104, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிநஆபி)த்துறை, நாள் 17.8. 2012**

அனுப்புநர்
திரு.தங்க கலியபெருமாள், இ.ஆ.ப.,
அரசுச் செயலர்

பெறுநர்
சிறுபான்மையினர் நல ஆணையர்,
சென்னை–2.

ஐயா,

பொருள் : ஜெருசலேம் புனிதப் பயணம் – கிறித்தவர்களின் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வருவதற்கு 2011–12 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது 2012–13 ஆம் ஆண்டு நிதி ஒப்பளிப்பு கோரியது குறித்த அறிவுரை – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண் 120, பி,மி.பி(ம) சிந (சிநஆபி) துறை, நாள் 25.12.2011.
2. அரசாணை (நிலை) எண் 34, பி,மி.பி(ம) சிந (சிநஆபி) துறை, நாள் 21.3.2012.
3. தங்களது கடித எண் 4328/டிஎம்4/2011, நாள் 25.5.2012,

--------

பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளின்படி கிறித்தவர்களின் புனித தலமான ஜெருசலேம் சென்று வருவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டில் 500 கிறித்தவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்வதற்கு ஒரு பயனாளிக்கு ரூ.20,000/– வீதம் ரூ.1 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, டாம்கோவின் பொது வைப்பு நிதிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

2. 2011–12 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் புனித பயணம் மேற்கொண்ட பின்னர் 2012–13 ஆம் ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பு செய்யக் கோரும் தங்களது கருத்துரு மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இக்கடிதம் நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண் 2/JS(RMD)/12, நாள் 17.8.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசுச் செயலருக்காக.